## குழித்துறை நகர்மன்றத்தின் 09-02-2023 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

### நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) 19-வது வார்டு மார்த்தாண்டம் பேருந்து நிலையம் பக்கத்தில் திரு. தயாளன் வீட்டின் அருகில் இருந்து மஞ்சாணிவிளை செல்லும் சாலையில் ஓடை அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு (தீ.எண்.1-4) நிதி ஒதுக்கப்பட்டது. மேற்படி இடத்தில் தற்போது ஒடை அமைக்க முடியாததால் 19-வது வார்டு வினோத் மருத்துவமனை முதல் மதி கோழிக்கடை வரை உள்ள சாலையில் கழிவுநீர் ஓடை அமைத்து சிலாப் போட மன்றம் தீர்மானிக்கலாம்(தீ.எண்.1-4).

   மன்றத்தீர்மான எண். 388 (1) - தீர்மானிக்கப்பட்டது.

2) குழித்துறை நகராட்சி பகுதிகளில் பொதுமக்கள் அச்சுறுத்தும் வகையில் சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண். 388 (2) - தீர்மானிக்கப்பட்டது.

3) வார்டு 21-ல் பால்பண்ணை செல்லும் சாலை துவங்கும் இடத்தில் இருந்து நகராட்சி எல்லை முடியும் இடம் வரை வடிகால் அமைக்கும் வேலையை பொதுமக்கள் கோரிக்கையின் அடிப்படையில் மாற்றி பால்பண்ணை சாலை துவங்கும் இடம் முதல் கீழ்பம்மம் பேருந்து நிறுத்தம் வரை உள்ள வடிகால் வேலையை செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண். 388 (3) - தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 1

தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ் 2022-2023-ம் ஆண்டிற்கு குழித்துறை நகராட்சியில் பொது கழிப்பிடம் கட்டும் பணிக்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தேங்காய்பட்டணம் சாலை முனுசாமி வணிகவளாகத்தின் பின்புறத்தில் கட்ட இடம் தேர்வு செய்து பணி மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டது. பணி ஆரம்பிக்கும் நேரத்தில் பொதுமக்களின் ஆட்சேபனை எழுப்பப்பட்டுள்ளதால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பணி இடத்தை நேராய்வு செய்ததில் பணியினை நிறுத்தி வேறு இடத்தில் வைத்திட அறிவுறுத்தப்பட்டது. மேலும் மேற்படி பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட முனுசாமி வணிகவளாகத்தின் பின்புறத்திற்கு பதிலாக மார்த்தாண்டம் கருங்கல் சாலையின் சந்தை

அருகாமையில் அமைந்துள்ள Tempo stand Survey No.D12/82 மின் லாறிபேட்டையில் கழிப்பிடம் கட்டிடம் கட்ட இடம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.3195/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 389 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 2</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் .TN.74W.0236-க்கு 2023-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மூலம் விலைப்புள்ளி பெற்று மதிப்பீடு ரூ.1,09,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.2295/2018/இ1.

மன்றத்தீர்மான எண். 390 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் .TN.75M.8752-ல் உள்ள டயர்கள் பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றி புதியதாக 6 டயர்கள் வாங்கிட உத்தேச செலவினம் ரூ.82,600/-க்கு Grip Appollow Tyres என்ற நிறுவனத்தினரிடம் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மேற்படி வாகனம் 80900 கி.மீ. தூரம் ஒடியுள்ளதால் புதியதாக 6 டயர்கள் வாங்கிடவும் அத்தொகையினை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.2386/2019/இ1.

மன்றத்தீர்மான எண். 391 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் .TN.75AL.6628-க்கு பழைய இரண்டு Tyreகள் பழுதாகி உள்ளதால் புதியதாக இரண்டு Tyre வாங்கி பொருத்தப்பட்ட வகைக்கு ரூ.7400/- ஒட்டுநர் திரு.த. சுந்தர்சிங் மூலம் Grip Appollow Tyres நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து ஒட்டுநருக்கு பிரிவு 15-ன்கீழ் தொகையினை வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பிரிவு 15-ன்கீழ் வேலை செய்தமைக்கும், தொகையினை ஒட்டுநருக்கு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்**.877/2018/E1.

மன்றத்தீர்மான எண். 392 - **அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் மேம்பாட்டு திட்டத்தின் 6755 எண்ணிக்கை வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டியுள்ளது. அந்த இணைப்புகளின் குழாய் ஆனது வீடுகளின் சுற்றுசுவர் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. வீடுகளின் பழைய இணைப்புகளோடு குழாயை இணைப்பதற்கு (internal Plumping) மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே internal Plumping செய்வதற்கு நகராட்சியின் பொது நிதியில் போதிய நிதி இல்லாத காரணத்தினால் இப்பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் முடிவு செய்யலாம்.

**ந.க.எண்**.14/2023/இ1.

மன்றத்தீர்மான எண். 393 - **அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சியின் தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையத்தில் குடிநீர் பயன்பாட்டிற்கு Liquid Chlorine பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது தலைமை நீரேற்று நிலையத்தில் குளோரின் இருப்பு குறைவாக உள்ளதால் புதியதாக 15000 லிட்டர் வாங்கிட 19-01-2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்வருமாறு. உள்ளது.

1) திரு. ஜெயசந்திரன் — 2.78% மதிப்பீட்டை விட அதிகம்
2) திரு.P. ஜெயபிரகாஷ் — மதிப்பீட்டு விலை விகிதம்

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.P. ஜெயபிரகாஷ் மதிப்பீட்டு விலை விகிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.

**ந.க.எண்**.135/2023/இ1.

மன்றத்தீர்மான எண். 394 - **அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12-ல் திட்டவிளை முதல் பாறைகடவு சாலை மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளதால், அந்த இடத்தில் உள்ள குடியிருப்புகளிலிருந்து வரும் கழிவுநீர் சாலையில் செல்வதால் பொதுமக்களுக்கு சுகாதாரகேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே மேற்கண்ட சாலையில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் காங்கிரீட் தளம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3,80,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு பணிகள் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.238/2023/E1.

மன்றத்தீர்மான எண். 395 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வெட்டுவெந்நி தேங்காய்பட்டணம் சாலையில் முனுசாமி வணிகவளாகம் பின்புறத்தில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளதால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே பொதுமக்கள் நலன்கருதி மேற்கண்ட கழிப்பிடத்தை மராமத்துபணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2,50,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேலும் தூய்மை இந்தியா திட்டம் 2.0-யின்கீழ் குழித்துறை நகராட்சியில் 1.28 இலட்சத்தில் சிறுநீர் கழிப்பிடம் அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.18856/2022/தூஇதி2, நாள் 13-07-2022-ல் அனுமதித்துள்ளது. எனவே SBM 2.0 திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை ரூ.1.28 இலட்சத்தை முனுசாமி வணிகவளாகத்தில் அமைந்துள்ள பொதுகழிப்பிடத்தை பராமரிப்பு பணிக்கு ஈடு செய்யலாம். மீததொகை ரூ.1,22,000/- பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், மேலும் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 25-01-2023 ஒப்பந்த.ப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | ராஜ் கன்ஸ்ட்சன்ஸ் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| 2 | D. ஜஸ்டின்குமார் | மதிப்பீட்டை விட 0.57% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் ராஜ் கன்ஸ்ட்சன்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்..
**ந.க.எண்.**237/2023/E1.

மன்றத்தீர்மான எண். 396 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 பிலாமண்விளை சப்பாத்து நடைபாதை மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளதால் பொது மக்களுக்கு போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட சாலையினை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.2,70,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு பணிகள் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**236/2023/E1

மன்றத்தீர்மான எண். 397 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 10</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2-ல் உள்ள பெருங்குளத்தில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து இருதயராஜ் வீடு வரை குழாய் அமைத்து தண்ணீர் வசதி செய்ய மதிப்பீடு ரூ.2,55,000/-த்தில் பணிகள் செய்திட 19-01-2023-ல் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு. ராஜன், குழித்துறை | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| 2 | திரு. டேவிட் | மதிப்பீட்டை விட 13.99% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.07% குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் பர்வையிட்டு முடிவு செய்யலாம்.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
**ந.க.எண்.**1421/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 398 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்களில் சானிட்டரி நாப்கின் எரிக்கும் இயந்திரம் 4 எண்ணம் வாங்கி பொருத்துதல் பணிக்கு ரூ.2.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் நகர்மன்றதீர்மானம் எண்.117, நாள் 20-05-2022-ன்படி மன்ற அனுமதி பெற்று 07-09-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்டவாறு.

1) திரு.P. ஜெயபிரகாஷ் 0.24% மதிப்பீட்டை விட குறைவு
2) திரு.P. ஜெயசந்திரன் மதிப்பீட்டு விலை விகிதம்

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1812/2022/H1.

மன்றத்தீர்மான எண். 399 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 12

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13-ல் உள்ள பந்நியாணி OHT முதல் பந்நியாணி சந்திப்பு வரை கழிவுநீர் ஒடை அமைக்கும் பணிக்கு ரூ.8.30 இலட்சம் மதிப்பீட்டில் வேலை செய்ய மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதின் அடிப்படையில் 06-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்டது. அதில் நகர்மன்ற தீர்மானம் எண்.377, நாள் 29-12-2022-ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 31-01-2023-ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு.K.G. கிருஷ்ணதாஸ் | மதிப்பீட்டை விட 17.60% குறைவு |
| 2 | திரு.A. ஆன்றணி | மதிப்பீட்டை விட 10.08% குறைவு |
| 3 | திரு.S. பாபு | மதிப்பீட்டை விட 21.55% குறைவு |
| 4 | திரு.P. ஜெயச்சந்திரன் | மதிப்பீட்டை விட 18.85% குறைவு |

வரப்பெற்ற 4 ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பந்ததாரர் திரு.பாபு என்பவர் மதிப்பீட்டை விட 21.55% குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் பர்வையிட்டு முடிவு செய்யலாம்.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
**ந.க.எண்.**1565/2022/இ1

மன்றத்தீர்மான எண். 400 - மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7-ல் உள்ள கச்சேரி வார்டில் வழக்கறிஞர் திரு. மோகனன் நாயர் வீட்டின் அருகே கழிவுநீர் ஓடை அமைத்தல் பணிக்கு ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதனடிப்படையில் 06-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மன்றம் தீர்மானம் எண்.375, நாள் 29-12-2022-ன்படி மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 31-01-2023-ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு.C. ராஜன், குழித்துறை | மதிப்பீட்டை விட 13.40% குறைவு |
| 2 | திரு.K.G. கிருஷ்ணதாஸ் செம்பருத்திவிளை | மதிப்பீட்டை விட 3.27% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பந்ததாரர் திரு.C. ராஜன் என்பவர் மதிப்பீட்டை விட 13.40% குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் பர்வையிட்டு முடிவு செய்யலாம்.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.1419/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 401 - மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண். 14</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3-ல் உள்ள படப்பறை மற்றும் இடைவிளாகம் பகுதியில் அமைந்துள்ள கிணற்றினை தூர்வாரி சுத்தம் செய்ய ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள மன்றம் தீர்மானம் எண்.267, நாள் 15-09-2022-ன்படி மன்ற அனுமதி பெற்று 06-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மன்றம் தீர்மானம் எண்.374, நாள் 29-12-2022-ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 31-01-2023-ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு.S. பாபு | மதிப்பீட்டை விட 19.37% குறைவு |

ஒப்பந்ததாரர் திரு.S. பாபு என்பவர் மதிப்பீட்டை விட19.37% குறைவாக கொடுத்துள்ளார். மேலும் ஒரு நபர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.3512/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 402 - மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண். 15</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15-ல் அமைந்துள்ள அட்டைகுளம் சாலையின் அருகே சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை மற்றும் உறை பலகையுடன் கூடிய வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.3.70 இலட்சம் மதிப்பீட்டில் வேலை செய்ய மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதனடிப்படையில் 06-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மன்றம் தீர்மானம் எண்.373, நாள் 29-12-2022-ன்படி மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 31-01-2023-ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு.S. பாபு | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2 | திரு. அமிர்தராஜ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. அமிர்தராஜ், ஒப்பந்ததாரர் 0.10% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் பர்வையிட்டு முடிவு செய்யலாம்.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.3110/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 403 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 16</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15-ல் உள்ள இசக்கியம்மன் கோயிலுக்கு எதிரே உள்ள அட்டைக்குளத்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதனடிப்படையில் 06-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மன்றம் தீர்மானம் எண்.376, நாள் 29-12-2022-ன்படி மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 31-01-2023-ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயச்சந்திரன் | மதிப்பீட்டை விட 0.17% குறைவு |
| 2 | திரு.P. ஜெயபிரகாஷ் | மதிப்பீட்டை விட 13.30% கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.P. ஜெயச்சந்திரன் 0.17% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் பர்வையிட்டு முடிவு செய்யலாம்.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.1418/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 404 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 17</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.75M4923-க்கு FC வேலைகள் முடிந்து R.T.O. அலுவலகத்திற்கு வாகனம் பரிசோதனைக்கு கொண்டு செல்ல ரூ.4110/-ஐ ஒட்டுநர் கையினால் செலவு செய்யப்பட்டது எனவும் அத்தொகையினை அன்னாருக்கு வழங்கிட தெரிவித்துள்ளார். செலவு செய்யப்பட்ட தொகை கீழ்வருமாறு உள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | RTO ON line fees | Rs. 1860 |
| 2) | 3/D Sticker | Rs. 1750 |
| 3) | Pollution Certificate | Rs. 300 |
| 4) | Gress Tyre Air checkup | Rs. 200 |
| | ஆகமொத்தம் | 4110 |

ஆகவே ஒட்டுநர் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.4110/-ஐ அன்னாருக்கு வழடங்கிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.22952019/இ1.

மன்றத்தீர்மான எண். 405 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 18</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.75M8752-க்கு பேட்டரி பழுதாகி உள்ளதால் புதிய பேட்டரி வாங்கி பொருத்திட ஒட்டுநர் அறிக்கை செய்துள்ளார். அதன்படி புதிய பேட்டரி வாங்கிட உள்ளூர் விலைப்புள்ளி வரப்பெற்றதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Manickam Battery Works என்ற நிறுவனத்தின் உத்தேச மதிப்பு ரூ.9000/-க்கு புதிய பேட்டரி வாங்கி பொருத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு வாகனத்தில் பழுதாகிய பேட்டரி அகற்றி புதிய பேட்டரி வாங்கி பொருத்திட மன்றத்தின் முடிவிற்கும்
ந.க.எண்.2386/2019/இ1.

மன்றத்தீர்மான எண். 406 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 19</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.75W0236-ல் 25-12-2022 அன்று காந்தி மைதானத்தில் கழிவுநீர் ஒடையினை சரி செய்ய வாகனத்தை எடுத்து சென்ற போது வாகனத்தின் Lift Pump Over oling Pump Electrical work, Pump Machnical work பழுதாகி உள்ளது. அதை சரி செய்ய Akshaya Motors என்ற நிறுவனம் மூலம் சரி செய்யப்பட்டதில் ரூ.3000/-ம் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.2295/2019/இ1.

மன்றத்தீர்மான எண். 407 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 20</u>

குழித்துறை நகராட்சி பராமரிப்பில் உள்ள கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் மற்றும் கணனி பொருட்கள் 2022-2023-ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்திட ரூ.97000/-ம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதால் 30-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | அஸ்வின் கம்பியூட்டர்ஸ் | ரூ.85100/- |
| 2) | ஆல்பா கம்பியூட்டர்ஸ் | ரூ.101550/- |
| 3) | இன்ஸ்டால் கம்பியூட்டர்ஸ் | ரூ.105650/- |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக கொடுத்துள்ள அஸ்வின் கம்பியூட்டர்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.
ந.க.எண்.4319/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 408 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 21

மார்த்தாண்டம் பேருந்து நிலைய முன்பகுதியில் உள்ள காலியிடத்தில் "நம்ம மார்த்தாண்டம்" என்று ஒரு அழகு சின்னம் அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி இப்பணியினை மேற்கொள்ள இடம் ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்குமாறு "The Chennai Silks" நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது. அதற்காக இந்த இடத்தினை ஒதுக்கீடு செய்து இந்நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
ந.க.எண்.251/2023/இ1.

மன்றத்தீர்மான எண். 409 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 22

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2-ல் உண்டனாகுழி வைஸ்ராய் சாலைக்கு தடுப்பு சுவர் இல்லாததாலும் மற்றும் சாலை மிகவும் பழுது ஏற்பட்ட நிலையில் காணப்படுவதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட சாலையினை சரி செய்ய, தடுப்பு சுவர் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.7,30,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிபீட்டிற்கு பணிகள் செய்தி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்..
ந.க.எண்.309/2023/இ1.

மன்றத்தீர்மான எண். 410 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 23

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 மேலக்குளம் சாலை மற்றும் வடக்குதெரு ஆகிய இரண்டு சாலைகளையும் இணைக்கும் பாதை மிகவும் பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட பாதை முக்கியமான பாதை ஆகையால் பொது மக்களின் நலன் கருதி உடனே சீரமைக்க வேண்டியுள்ளது. எனவே திரு. ஜார்ஜ் வீடு கதவு எண்.29/180 முதல் வடக்குத்தெரு வரை சிமெண்ட் காங்கிரீட் மற்றும் பேவர் பிளாக் பாதையாக பொது நிதியில் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.2,70,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்..
ந.க.எண்.313/2023/இ1.

மன்றத்தீர்மான எண். 411 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 24</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 V.L.C. மண்டபத்தின் நுழைவாயில் அமைந்துள்ள படிப்பகம் (ஸ்ரீமூலம் படிப்பகம்) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2,20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி பணியினை பொது நிதியில் செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்..
ந.க.எண்.312/2023/இ1.

மன்றத்தீர்மான எண். 412 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 25</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 திருத்துவபுரம் சாலையில் V.G. Tailor வீடு முதல் வித்தியாதிராஜா பள்ளி வரை உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ளது. இதனால் பொது மக்களுக்கு பொது சுகாதார கேடு விளைவிக்கும் வகையில் பல நோய்கள் வர வாய்ப்புள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.4,10,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது..

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.310/2023/இ1.

மன்றத்தீர்மான எண். 413 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 26</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 இடையர்விளாகம் சாலை பழுதடைந்துள்ளதை பொது மக்கள் நலன் கருதி மேற்படி சாலையினை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.4,00,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது..

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்..
ந.க.எண்.311/2023/இ1.

மன்றத்தீர்மான எண். 414 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 27</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 பனவிளைவீடு முதல் பிலாமன்விளை வரை உள்ள நடைபாதை மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட சாலையினை சிமெண்ட் காங்கிரீட் பாதையாக சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3,70,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டில் வேலை செய்யவும் மேற்படி வேலையினை பொதுநிதியில் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்..
ந.க.எண்.314/2023/இ1.

மன்றத்தீர்மான எண். 415 - அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/-திரு.பொன்.ஆசைத்தம்பி,
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.